# *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi*
## *CC.No. 474/2020 – P.W. 8 (LW12)*

| | |
|---|---|
| *Name* | ஜெயபிரகாஷ் மருத்துவர்<br>தஞ்சாவூர் வினோதகன் நினைவு மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 55 |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தஞ்சாவூர் வினோதகன் நினைவு மருத்துவமனையில் மருத்துவராக உள்ளேன்.

கடந்த 05.02.2020 ம் தேதியன்று மாலை 07.55 மணிக்கு தஞ்சாவூர் வினோதகன் நினைவு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது குமாரசாமி மகன் 78 வயதான தமிழ்செல்வம் என்ற காயம்பட்ட நபரை அவரது மகள் சசிக்கலா என்பவர், என்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் அதே நாள் மாலை 05.30 மணிக்கு வடுவூரில் இரண்டு சக்கர வாகனத்தில் செல்லும் போது அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறி அழைத்து வந்தார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு இருந்த காயங்கள்

1) தலையின் இடது பக்கத்தில் 5X3X2 cm அளவுள்ள சிதைந்த காயம்,

2) முதுகில் தொடு வலி இருந்தது.

காயம்பட்ட தலை மற்றும் முதுகு பகுதியில் CT scan படம் எடுத்தில் தலையின் இடது பக்க டெம்போரல் எலும்பு முறிவு, நெஞ்சில் பல விலா எலும்பு முறிவுகளும்,

நுரையீரலில் கன்றி போன காயங்கள், நுரையீரலுக்கும், நெஞ்சு கூட்டிற்கும் இடையே இரத்தம் உறைந்து இருந்தது. அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்து உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அசா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அவர் சிகிச்சை பலனின்றி 18.02.2020 ம் தேதியன்று இரவு 07.45 மணிக்கு இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து பதிவேட்டில் பதிவு செய்த தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் யார் காயம்பட்ட நபரை யார் அழைத்து வந்தார்கள். அவர்கள் என்ன உறவு முறை என்பது இடம் பெறவில்லை என்றால் சரிதான். Previous விபத்து பதிவேடு ஏதும் இருந்தால் இந்த விபத்து பதிவேட்டில் அந்த AR எண்ணை குறிப்பிடவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi